**Chapter XXIII code of Criminal procedure**
**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SHOLINGANALLR**
**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| **Calender** | : | |
| **Miscellaneous** | : | **CC.No.332/2025** |
| **Preliminary Register** | : | |
| **Police Station** | : | **Kannagi Nagar PS** |
| **Deposition of witness for** | : | **LW9/PW2 (**கூடுதல் சாட்சி**)** |
| | : | |
| **Name** | : | சந்தோஷ்குமார் **(**உதவி ஆய்வாளர்**)** |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.04.2026.**

**(**எதிரிகள் ஆஜர் **,** எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**)**

அரசு தரப்பு முதல் விசாரணை

1. இவ்வழக்கின் விசாரணை அதிகாரியாக வேலு என்பவர் பணி ஓய்வில் சென்றுவிட்ட காரணத்தினாலும் வழக்கு நீண்ட காலமாக நிலைமையில் உள்ள காரணத்தினாலும் சக அதிகாரி என்ற முறையாலும் அவரது கையொப்பம் எனக்கு நன்கு தெரியும் என்பதாலும் ஆவணங்களின் அடிப்படையில் நாம் இந்த வழக்கின் தாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு சாட்சியம் அளிக்கிறேன். நான் தற்போது கண்ணகி நகர் காவல் நிலையத்தில் சட்டம் ஒழுங்கு பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த

5.1.2023 ஆம் தேதி 22 மணிக்கு விசாரணை அதிகாரியாக திரு வேலு அவர்கள் நிலை அலுவலில் இருந்தபோது புகார் திரு ராதாகிருஷ்ணன் ஆண் வயது 40 என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் இணை நிலைய குற்ற எண் 6/23 சட்டப்பிரிவுகள்294(b),323,384, 506(2) IPC இன் கீழ் முதல் தகவல் அறிக்கை தயார் பதிவு செய்துள்ளார். அந்த புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை அரசு தரப்பு சான்று ஆவணம் ஒன்று மற்றும் இரண்டு ஆக குறியீடு செய்யப்படுகிறது பின்னர்06.01.2023 காலை06.45 மணியளவில் சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் முருகேசன் மற்றும் வெங்கடேசன் என்பவர் சம்பவ இடத்தினை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். அவைகள் முறையை அ.த.சா.ஆ. 3 மற்றும் 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. பின்னர் எதிரியை தேடி வந்த நிலையில்06.01.2023 தேதி பகல்12.00 மணி அளவில் கண்ணகி நகர் சிவன் கோயில் அருகில் வைத்து கைதுக்கான காரணம் கூறி கைது செய்தார். அப்போது எதிரி தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை சாட்சிகள் ரவி மற்றும் பரமேஸ்வரி ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தார்.பின்னர் எதிரி அடையாளம் காண்பித்து எடுத்துக் கொடுத்த வழக்கிள் சுத்தமான சிறிய கத்தி ஒன்றை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் தயார் செய்து கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரியை நிலையம் அழைத்து வந்து திரேக பரிசோதனை செய்து பாராவசம் ஒப்படைத்து நீதிமன்றம் காவலில் ஒப்படைத்தார்.

3. பின்னர் கைப்பற்றப்பட்ட இந்த வழக்கின் வடிவம் 91 ஒன்றின் கீழ் நீதிமன்றத்தில்ஒப்படைத்தார். அந்த படிவம் 91 அரசு தரப்பு சான்று ஆவணம் ஆறுகாக

குறியீடு செய்யப்படுகிறது. அந்த கத்தி அ.த. சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பட்டியல் சாட்சிகள் 2 முதல் 8 வரை உள்ளவர்களை தனித்தனியாக விசாரணை செய்து அவர்களின் வாக்குமூலத்தின் பதிவு செய்தார். இத்துடன் விசாரணை முடித்து சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் சட்ட பிரிவுகள்294(b),323,384, 506(2) IPC இன் கீழ் இறுதி அறிக்கை தயார் செய்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கின் புகார்தாரரே பிறழ் சாட்சியாக மாறியதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கின் விசாரணை அதிகாரி காவல் நிலையத்தில் வைத்து வழக்கு கோப்பைகளை எதிரிகளுக்கு எதிராக பொய்யாக தயார் செய்தவை என்றால் சரியல்ல. வழக்கின் விசாரணை அதிகாரி அவரின் மேல் அதிகாரியின் வேண்டுகோளுக்கிணங்க எதிரி மீது பொய்யாக போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. இந்த வழக்கின் விசாரணை அதிகாரி இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கத்தியை எதிரியிடமிருந்து கைப்பற்றாமல் இந்த வழக்கறிக்காக தயார் செய்யப்பட்ட பொய்யான வழக்கு சொத்து என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை.</u> இல்லை

Sd/-M.N.ராஜநந்திவர்மசிவா
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
சோழிங்கநல்லூர்.